DECEMBER 2022 **U/ID 33208/UCT2C/ UCL2B**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் 30 சொற்களில் விடை எழுதுக.

1. செய்யுளின் இலக்கணத்தை நன்னூல் எவ்வாறு கூறுகிறது?

2. குறிப்பினால் பொருளைத்தரும் சொற்கள் யாவை?

3. இருதிணைப் பொதுப்பெயர்கள் யாவை?

4. "ஆறும் தருவது வினையே" - என்பதை எடுத்துரைக்க.

5. வினையெச்சமாவது யாது?

6. ஒன்றொழி பொதுச்சொல்லை விளக்குக.

7. வழுக்கள் எத்தனை வகைப்படும்?

8. இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள் என்றால் என்ன?

9. இடைச்சொல்லின் பொருள்களைத் தருக.

10. தொகை பெற்றும் பெறாமலும் வரும் எண்ணிடைச் சொற்கள் யாவை?

11. உரிச்சொல்லின் வகைகளை விளக்குக.

12. உயிருடைப் பொருள்களின் குணப்பண்புகள் யாவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 200 சொற்களில் விடை எழுதுக.

13. எட்டு வேற்றுமைக்கும் உரிய உருபு, பொருள், சொல்லுருபுகளைத் தருக.

14. தற்கிழமைப் பொருள், பிறிதின் கிழமைப்பொருள் - இவற்றை விளக்குக.

15. தெரிநிலை வினைச்சொல்லின் பொதுவிலக்கணம் யாது?

16. சொல்லெச்சம், குறிப்பெச்சங்களை விளக்குக.

17. அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி குறித்து எழுதுக.

18. ஏகார ஓகார இடைச்சொற்கள் தரும் பொருள்களைக் கூறுக.

19. உயிர்ப்பொருள், உயிரல்லாத பொருள்களின் குணப்பண்புகளை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 500 சொற்களில் விடை எழுதுக.

20. சொற்களின் வகைகளை விளக்குக.

21. தெரிநிலை வினைமுற்றின் பாகுபாடுகளை விளக்கியுரைக்க.

22. பொருள்கோள் எத்தனை வகைப்படும்? அவற்றை விளக்குக.

23. இடைச்சொல்லின் பொது இலக்கணம் கூறி முன்னிலை அசைச்சொல் வருமிடங்களைத் தெளிவுபடுத்துக.

24. உரிச்சொற்களின் வகைகளை விளக்கி எழுதுக.

———————